Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 23 உ செவ்வாய்க்கிழமை (09 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ஏபி. அப். 19 ஓசை 234

## அனுமதி பெறும் முன்பே விநியோகம் முடிந்துவிட்டது

(யாழ்ப்பாணம்)

ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கான நிவாரணம் வழங்குவது பற்றிய அனுமதிகோரி யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ள அதேவேளை, அனுமதி பெறாமலே ஒருசில கிராம சேவையாளர் பிரிவில் உலர் உணவு விநியோ

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆவணங்களைத் திரும்ப பெறலாம்

பயணிகள் போக்கு வரத்து தொடர்பகத்தில் வெளிமாவட்ட அனுமதி பெறுவதற்காக முத்திரைச் சந்தி பயணிகள் போக்கு வரத்து தொடர்பகத்தில் கொடுத்த அடையாள அட்டை, சான்றிதழ்கள், அத்தாட்சிகள் அனைத்தையும் மீளப்பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்று முத்திரைச் சந்தியில் உள்ள பயணிகள் போக்கு வரத்துத் தொடர்பகத்தில் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

# கடலில் மூழ்கிய அகதிகள் 67 பேர் பரிதாப மரணம்!

(புதுக்கோட்டை)

அனலைதீவில் இருந்து தமிழ்நாடு நோக்கி அகதிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று நடுக்கடலில் கவிழ்ந்ததில் அறுபத்தியேழு பேர் அளவில் கடலில் மூழ்கி மாண்டனர் என அஞ்சப்படுகிறது. இவ்வாறு இறந்தவர்களின் சடலங்களை இந்தியக் கடற்படைக் கப்பல்களும், விமானப்படைக் ஹெலிக்கொப்டர்களும் தேடி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை அனலைதீவுக் கரையிலிருந்து எழுபத்தியெட்டுப் பேருடன் தமிழ்நாடு நோக்கிச் சென்ற படகே கடலில் மூழ்கியது. இப்படகு நேற்றுமுன்தினம் மூழ்கியது. இச்செய்தியை இப்படகில் பிரயாணம் செய்து படகு கவிழ்ந்தபோது நீந்திக் கரைசேர்ந்த பதினொருபேர் தெரிவித்தனர். இப்படகில் இருந்துநீந்திக்கரைசேர்ந்தவர்கள் தமிழ்நாடுபுதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தை வந்துசேர்ந்தனர்.

தற்போது இப்படகில்மூழ்கியவர்களைத் தேடும்பணியில் இந்தியக் கடற்படைப் படகுகளும், விமானப்படை ஹெலிக்கொப்டர்களும் ஈடுபட்டுள்ளதாகச்செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 48 மணி நேரத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிச்சென்று மூழ்கிய இரண்டாவது படகு இதுவாகும். முதலாவது படகில் இருந்த 17பேர் தனுஷ்கோடியருகே மரணமானது தெரிந்ததே.

## 4 தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேர்த்தாத்தீவு என்றகிராமத்தில் நான்கு அப்பாவித் தமிழ்மக்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இக்கிராமத்திற்குள் புகுந்து தேடுதல் நடத்திய சிறிலங்கா இராணுவத்தினர் இவர்களைக்கைது செய்து சுட்டுக் கொலைசெய்தனர். (க)

## 15 நாட்களின் பின் வீடு வந்து சேர்ந்த கிராமசேவையாளர்

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதி சென்று காணாமல் போயிருந்த சாஸ்திரி கூழாங்குளம் கிராமசேவையாளர் திரு. சிவராசா வீடுவந்து சேர்ந்துள்ளார்.

மேற்படி நகரப்பகுதியில் வைத்து இனந்தெரியாத சில நபர்களால் கைது செய்யப்பட்டு கைகளும், கண்களும் கட்டப்பட்ட நிலையில் கடத்தப்பட்ட இவர் சுமார் 15 நாட்கள் சிறை வைக்கப்பட்டு கடுமையான சித்திரவதைகளுக்குப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார் என்று தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊர்காவற் படை அமைக்க அரசு முயற்சியாம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கில் இரண்டாயிரம் தமிழ் ஊர்காவற்படையினருக்கு பயிற்சி அளிக்கப்படும் என ஸ்ரீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் குழுக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முஸ்லிம் ஊர்காவற்படையினரால் தமிழர்களுக்கு பாதுகாப்பில்லையென இவர்கள் கூறியதாகக் குறிப்பிட்ட இலங்கை அரசு ஆதலால் தான் தமிழ் மக்கள் இரண்டாயிரம் பேருக்கு ஆயுதப்பயிற்சி அளிக்கப்போவதாகத்தெரிவித்தது.

## பாடசாலை அதிபர் ஒருவர் ஊர்காவற்படையால் கோலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அட்டப்பள்ளம் தமிழ் பாடசாலை அதிபரை முஸ்லிம் ஊர்காவற்படையினர் கொலை செய்துள்ளனர்.

காரைதீவைச் சேர்ந்த திருமதி மங்கையற்கரசி என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவர். இவரை முஸ்லிம் ஊர்காவற்படையினர் கழுத்தில் கயிறு ஒன்றைப் போட்டு நெரித்துக் கொலை செய்துள்ளனர்.

இவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்பாடசாலையின்அதிபராகக் கடமைஆற்றியுள்ளார். (க)

## சரவணையில் வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியிலிருந்து கடந்த 28 ஆம் திகதி இராணுவம் பின்வாங்கிய பொழுது சரவணை மேற்குப் பகுதியில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் பாரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## உடன் கடமைக்குத் திரும்ப மக்கள் முன்னணி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டத்தில் கடமை புரியும் யாழ் மாவட்டத்தில் தங்கியிருக்கும் ஊழியர்களை உடன் கடமைக்குத் திரும்பும்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் மூர்த்தி கேட்டுக் கொண்டார்.

நேற்று வன்னி மாவட்ட ஊழியர்களை கச்சேரியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு படையினர் காயம்

(கொழும்பு)

முறக்கொட்டாஞ்சேனை வாழைச்சேனைப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதலில் இரண்டு படைவீரர்கள் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஊழியர் ஒழுங்கின்மை; நோயாளருக்கு இன்னல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை) யில் பணியாற்றும் சில ஊழியர்கள் ஒழுங்கான நேரத்திற்கு கடமைக்குச் சமுகமளிப்பதில்லை என்றும் இதனால் நோயாளர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாகவும்நோயாளர்கள் பலத்த புகார்கள் தெரிவித்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியருக்கு மட்டுமே இன்று பிரயாண அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்வசிக்கும் வெளி மாவட்டத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர் மட்டுமே முத்திரைச் சந்தியில் இன்று பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரிய வருகிறது. வவுனியா மாவட்டத்திற்கு வெளியில் செல்லும் ஏனைய பயணிகளின் அனுமதிகள் தற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கழுதாவளையில் 40 தமிழர்கள் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

கழுதாவளைப் பகுதியில் நாற்பதுதமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கழுதாவளைப் பகுதியை நேற்று முன்தினம் பெருந்தொகையான சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொண்டனர். தேடுதலின் போது இராணுவத்தினர் நாற்பது தமிழரைக் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை. (மு)

## யாழ். மாநகரசபை மீண்டும் பழைய இடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களால் சேதமாக்கப்பட்ட பின்னர் இடம் மாற்றப்பட்ட யாழ். மாநகர சபை அலுவலகம் மீண்டும் அதே இடத்தில் அடுத்த வாரம் முதல் இயங்க உள்ளது.

இது சென்ற ஆகஸ்ட்மாதம் பல தடவை குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு உள்ளானதன் காரணமாக நல்லூர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் கைதானவர்கள் தொடர்பாகத் தகவலில்லை

(வடமராட்சி)

கடந்தமாதம் கடலில் கைதான இருபத்திரெண்டு அகதிகள் பற்றிய எந்தவித தகவல்களும் தெரியாத நிலையில் உறவினர்கள் கவலையும் கண்ணீருமாகக் காணப்படுகின்றனர்.

பருத்தித்துறை முனைப்பகுதியிலிருந்து நான்கு பெண்கள், இரண்டு குழந்தைகள் உட்பட சுமார் இருபத்தியிரண்டு பேர் தமிழ்நாடு நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயமே இலங்கைக் கடற்படையினர் சுற்றி வளைத்துப் பிடித்துத் தமது படகுடன் சேர்த்துக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாரடைப்பால் வீதியில் மரணம்

(தெல்லிப்பளை)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று அதிகாலை 5.30 மணி அளவில் நாராயணபிள்ளை வைரமுத்து (வயது 49) என்பவர் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு சைக்கிளால் வீழ்ந்து மரணமானார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆறு இராணுவத்தினர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் செட்டிப்பாளையம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் இவர்களை வழிமறித்து தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் படு காயம் அடைந்தனர். இராணுவ வாகனமும் சேதத்திற்குள்ளானது. (க)

## வரிவிளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**(Dilka Watch Works)**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக் கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1444)

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்கோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்றொனிக் கடிகாரங்களின் பற்றிகளும் விற்பனைக்குண்டு. (B/1470)

**தேவை**

ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் தேவை வெளிநாட்டவர் உரையாடும் ஆங்கில மொழியைப் புரிந்து கொள்ளக் கூடிய ஆண்கள் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும் விண்ணப்பங்களை நேரடியாக ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது தபால் மூலம் அனுப்பவும்.

B.1478

**தேவை**

2104 அல்லது 2105 இலக்கங் கொண்ட 21 அங்குல Sony ரெலிவிஷன் உடனடியாகத் தேவைப்படுகிறது. தொடர்பு கொள்ளவேண்டிய மூகவரி. விளம்பர இல: C/0 ஈழநாதம் 31 வைமன் வீதி. யாழ்ப்பாணம். B 1479


## இரு படையினர் கால்களை இழந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான்குளம் என்ற இடத்தில் விடுதலைப்புலிகள் வைத்த மிதிவெடியில் சிக்கிய இரண்டு இராணுவத்தினர் தமது கால்களை இழந்துள்ளனர். நேற்று முன்தினம் இராணுவத்தினர் முகாமிலிருந்து வெளியேறிய போது இச்சம்பவம் இடம் பெற்றது. (க

**அரசாங்க அறிவித்தல்**

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர் அனைவரும் எதிர்வரும் வியாழக்கிழமை 11-10-90 காலை 9.00 மணிக்கு வேலணை அரசாங்க ஆஸ்பத்திரியில் தற்காலிகமாக இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் தவறாது சமுகம் தரவும்.

சுகாதாரவைத்திய அதிகாரி
ஊர்காவற்றுறை

(B)/1477)


## ஆண்டு 5 தொடக்கம் 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

ஆண்டு 5 தொடங்கி ஆண்டு 11 வரையிலான வகுப்புக்களில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் 9-10-90 பிற்பகல் 3-00 மணிக்கு தவறாது சமுகமளிக்கவும்

**யூனிவேர்சல்**
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(B-1452)


## பெற்றுக் கொள்ளலாம்

தரமான விதை நெல் வகைகளையும் ஏனைய நெல் வகைகளையும் எம்மிடம் எவரும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு மூடை நெல்லின் விற்பனை விலை ரூபா 675 மட்டுமே

நாடவேண்டிய இடம்
முத்தையன்கட்டு
**பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்**
ஒட்டுசுட்டான்

(B-1474)


## வீரமரணயாத்திரையின் 47ஆம் நினைவு நாள்



செல்வன்
**கனகசபாபதி லோகேந்திரா**
(கைலாஸ்)

*தமிழ்த்தாய் மகிழ்ந்திட மலர்வு: 21-01-1975*
*தமிழீழம் மலர்ந்திட உதிர்வு: 24-08-1990*


வீறுடன் விடிவு காண வேண்டி
வேறேதும் எண்ணிடா விடுதலை வீரனே
பேறுமட்டுமன்றி பெருமையும் பெற்றாய் நீ
வேறுலகெய்தினாலும் என்றும் எம்மில்
நீற்று நெருப்பாய் வாழ்வாய் - உன்
நித்தியக் கனவது நிச்சயம் வெல்லும் வெல்லும்
உன் இலட்சிய யாத்திரையில்
உன்னை மறவாது தொடரும்

அன்பு
அப்பா, அம்மா, சகோதரர்கள்
உற்றார் உறவினர்.

அரியாலை
யாழ்ப்பாணம்.

(R/713)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கு. சிவஸ்ரீதரன்
**லெப். சிவா**
(கைதடி பொறுப்பாளர்)
தோற்றம்: 27-11-1968
மறைவு: 09-10-1988



கு. தெய்வேந்திரன்
(சுரேன்)
22-12-1966

உன் ஈழத்தின் தாகத்தால் கைதடியை
பொறுப்பேற்று
கண் இமைபோல் காத்தாய்!
கைதடிவாழ் மக்கள் மனதார மகிழ்ந்தனர்
உன் மனதைக் கல்லாக்கி மறைந்தாயோ?

சுரேன்!
தானடைந்த புகழனைத்தும்
தரணிதனில் நிலைநிறுத்தி
தேவா உம்மை கயவர்
கைவசப்படுத்தினரோ
எங்கு சென்று மறைந்தீரோ!

பெற்றோர், சகோதர சகோதரிகள்
மைத்துனர், மைத்துனிமார்

(R 711)

## நான்காம் ஆண்டு நினைவாக



மன்னார் மாவட்டத் தளபதி
**லெப். கேணல் விக்டர்**
(மருசலீன் பியூஸ்லஸ்)

2ஆம் லெப்டினன்ட் **ரோம்**

வீரவேங்கை **நாயுடு**

உலக வரலாற்றிலே - தமிழீழ
விடுதலைப் போராட்டத்தை
செழுமைப் படுத்தியவன்
தமிழீழ போராட்டத்திற்கு
புத்துயிர் ஊட்டியவன்
களத்திலே போராடி
எதிரிகளைக் கைது செய்ய
தன்னுயிரை ஈய்ந்தவன்
மாவீரன் விக்டர் அவர்கட்கு
அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

பூநகரி பள்ளமடு பிரதேச
மட்டுவில்நாடு கிழக்கு
சிற்றூரவையினர்

(B.1471)

## சிந்தனைக்கு

''அஞ்சினர்க்குச் சதமரணம் அஞ்சாத
நெஞ்சத்து ஆடவருக்கு ஒரு மரணம்''
- பழந்தமிழ் இலக்கியத்தில்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 09-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## அச்சம் தவிர்

உலகில் போராடாதவர்கள் சுதந்திரமாக வாழ்ந்ததில்லை. உலகில் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்ற நாடுகள், இனங்கள் எல்லாம் போராட்டத்தின் மூலமாகவே தமது சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டவையாகும். பல நாடுகள் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும், சில நாடுகள் மன்னர்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கு எதிராகவும், போராடியதோடு, தமக்கு எதிராகக்கிளர்ந்த அண்டை நாடுகளுடனும் போரிட்டே இன்று சுதந்திரமாக வாழ்கின்றன. சில நாடுகள் அல்லது இனங்கள் இன்றும் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன.

இதேபோன்றே இலங்கையில் தமிழ்த் தேசிய இனமும் தனது விடுதலைக்காகப் போராடிக் கொண்டு இருக்கின்றது. ஆனால் கடந்த மூன்று நாட்களாக குடாநாட்டில் இருந்து வெளிச் செல்லும் மக்கள் தொகையைக் காணும் போது ஆச்சரியமளிக்கின்றது.

இவர்கள் ஏன் ஓடுகின்றார்கள்? எங்கு ஓடுகின்றார்கள்?

1983 ஆம் ஆண்டில் இருந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்த பிறகு வட மாகாணத்தில் முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இன்று தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் இருந்த சிறிலங்கா இராணுவத்தின் முகாம்கள் குறைந்துள்ளன. இருக்கும் சில முகாம்களும் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றன. இந்த நிலையில் வெளியேறுவதன் நோக்கம் மண்வாசனையில் ஏற்பட்டு விட்ட வெறுப்பா? அல்லது ஏற்படப் போகும் இடைக்காலத் துன்பத்தில் தங்கள் சகோதரர்களுடன் பங்கு கொள்ள விருப்பமின்மையா? அதன் பின் வரப் போகும் சுதந்திரக் காற்றை அனுபவிக்க ஆவலில்லையா?

உலகில் நடந்த விடுதலைப் போராட்டங்களில் உயிருக்கஞ்சி மக்கள் தமது சொந்த மண்ணைவிட்டு ஓடியிருந்தால் இன்று பல விடுதலைப் போராட்டங்கள் வெற்றியில் முடிந்ததை நாங்கள் கண்டிருக்க முடியாது. அத்தோடு இன்று உலகில் உள்ள நாடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்திருக்கும். சுதந்திரப் போராட்டங்களில் இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை. இழப்புக்களை தவிர்க்க முற்பட்டால் அடிமைத்தனம் தவிர்க்க முடியாததாகப் போய்விடும்.

இங்கிருந்து ஓடுபவர்கள் பெரும்பாலும் இந்தியா நோக்கியும், மேற்கு ஐரோப்பா நோக்கியுமே ஓடப் பார்க்கின்றார்கள். அங்கு இவர்களுக்குச் செங்கம்பள வரவேற்புக் காத்திருக்கவில்லை. வேண்டா விருந்தாளிகளாகவே கணிக்கப்படுகின்றார்கள். அங்கு இவர்களுக்கென அகதிமுகாம்களோ, அல்லது மூன்றாம்தரத் தொழில்களோதான் காத்திருக்கின்றன.

அதாவது மூன்றாம்தரத் தொழிலைச் செய்யும் நவீன அடிமைகளாக மாறுகின்றார்கள். 500 வருடங்களுக்கு மேலாக அடிமைகளாக வாழ்ந்துவிட்டதனால் அதிலிருந்து விடுபட்டு வாழ்வது கொஞ்சம் கஷ்டமாக இருப்பது நியாயம்தான்.

மேற்கு ஐரோப்பா நோக்கி ஓடுபவர்கள் ஒன்றை மனதிற்கொள்ள வேண்டும். மேற்கில் பேசப்படும் ஜனநாயகம் உங்களுக்குரியதல்ல அது அவர்களுக்குரியது. இதற்கு சுலபமான உதாரணம் ஒன்றை நாங்கள் உங்களுக்குக்காட்டலாம். 400வருடங்களுக்கு மேலாக மேற்கில் வாழும் கறுப்பின மக்கள் இன்றும் அங்கு இரண்டாந்தரப் பிரஜைகள் நிலையிலேயே உள்ளார்கள் என்பதை.

ஆனால் உங்களுக்கு அதைப் பற்றிய பிரச்சினை இல்லை. ஏனெனில் சொந்த மண்ணிற்காகப் போராட முன்வராதஉங்களுக்கு சுதந்திரத்தைப்பற்றிய எண்ணமோ, அடிமை வாழ்வைப் பற்றிய எண்ணமோ அங்கு வரப்போவதில்லைத்தான்.

அதேவேளை நாங்களும் உங்களுக்கு ஒன்றைச் சொல்லி வைக்கவேண்டும். ஐரோப்பாவில் இன்றும் 'நாஜிகள்' மறைந்துவிடவில்லை இவ்வருடமும் நாஜிகள் ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் ஜேர்மனியில் இடம்பெற்றன என்பதுவே அதுவாகும்.

## லயன்ஸ் இலவச சேவை

அகதிமுகாம்களில் தங்கியிருப்போர் நன்மை கருதி வடடுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரால் ஓர் இலவச வைத்திய சேவைநிலையம் சித்தங்கேணியில் உள்ள லயன்ஸ் தொழிற்பயிற்சி கட்டடத்தில் எதிர்வரும் 14 - 10 - 1990 ஞாயிற்றுக்கிழமை காலை 10 00மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும். இந்நிலையத்தில் லயன்ஸ் டாக்டர்கள் இலவசமாக சேவையாற்ற இருக்கின்றனர். இங்கு சகல நோய்களும் இனம் காணப்பட்டு உரிய வைத்தியசேவை வழங்கப்படும். இங்கு வைத்திய சேவையைப் பெறவிரும்புவோர் தாம் தங்கி உள்ள அகதிமுகாம் பொறுப்பாளரிடம் இருந்து ஓர் அத்தாட்சிக் கடிதத்தினைப் பெற்று வருமாறு கேட்கப்படுகின்றனர். மேலும் இந்நிலையம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையில் மாத்திரம் காலை 10-00 மணி தொடக்கம் பி.ப 12-30 மணி வரை திறந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# உயர் நீதிமன்றத்தின் தலையில்

# பாபர் மசூதி - இராம ஜன்ம பூமி

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த நிலையில் வி.பி. சிங் அரசாங்கம் மிகவும் இக்கட்டான நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இப்பிரச்சினையிலிருந்து தப்பிப்பிழைக்க வி. பி. சிங் அரசாங்கம் பெரும் பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது.

கடந்த மாதம் சென்னையிற் கூடிய தேசிய ஒருமைப்பாட்டுச் சபைகளின் கூட்டத்தில் பாபர் மசூதி - இராம ஜன்ம பூமி விவகாரத்திற்கு முன்னுரிமை அளித்து விவாதிக்கப்பட்டது, ஆனால் இக்கூட்டத்தை பாரதீய ஜனதாக் கட்சி புறக்கணித்தது. இறுதியில் தேசிய ஒருமைப்பாட்டுச் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதாவது இப்பிரச்சினை சம்பந்தமாக சுப்றிம்கோட் என்ன தீர்மானிக்கிறதோ அதன்படி நடந்து கொள்வது என்பதாகும்.

இத்தீர்மானத்தை பாரதீய ஜனதா கட்சி நிராகரித்துள்ளது. இப்பிரச்சினையானது இரு தரப்பார் மத்தியிலும் அறிவுபூர்வமான நிலையிலன்றி உணர்ச்சிபூர்வமான நிலையை எட்டியுள்ளது. எனவே இதனைச் சமாளிப்பது இலகுவல்ல. நீதிமன்றத்தின் தலையில் இப்பிரச்சனையை சுமத்திவிடுவதைத் தவிர வி. பி. சிங்கிற்கு வேறு வழியும் இல்லை.

இவ்விவகாரம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் எழக் கூடிய சிக்கல்களை ஆராய்வோம். அதாவது இராமர் பிறந்தார் என்றோ, அல்லது அயோத்தியில்தான் பிறந்தார் என்றோ சட்டத்தின் முன் ஆவண ரீதியாக நிருபிக்கக் கூடிய ஆதாரம் இந்துக்களிடம் இருக்காது. இலக்கிய ரீதியான ஆதாரங்கள் மட்டுமே அவர்களிடமுண்டு. எனவேஇதனை

## சாரணன்

ஒரு சட்ட வலுவான விடயமாக நீதிமன்றம் ஏற்பது கடினம்.

அதேவேளை இந்தியாவில் மதம், மற்றும் சம்பிரதாயங்களை அனுசரித்து நீதிமன்றம் நடந்து கொள்வதுண்டு. உதாரணமாக யாழ்ப்பாணத்து தேசவழமைச் சட்டத்தைப் போல, அதற்கு நிகரான வழக்கங்கள் இந்திய நீதிமன்றங்களில் அமுலில் உண்டு. ஆயினும் இது ஒரு பலவீனமான வாதமாகவே அமையும்.

அடுத்து இன்று பாபர் மசூதி இருக்கும் இடத்திலேதான் முன்பு இராமர்கோயில் இருந்தது என்ற வாதம். இராமர் என்றொருவர் பிறந்தாரா இல்லையா என்பதை விட இராமர் கோயில் ஒன்று இருந்தது என்ற அடிப்படையில் உரிமை கோருவது பலமான வாதம். இதனை வரலாற்று ஆவணங்கள் மூலம் நிருபிக்க வேண்டும். ஒரு வகையில் இதனை நிருபிப்பது சாத்தியப்படலாம்,

ஆனால் அவ்வாறு நிருபித்தாலும் ஒரு சிக்கல் எழும். அதாவது பாபர் மசூதி பல நூற்றாண்டுகளாக இன்று இருக்கும் இடத்தில் உள்ளது. எனவே இஸ்லாமியர்கள் கால ஓட்டத்தின் மூலம் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு உரிய ஆட்சி உரிமையைப் பெற்றவராவர். சட்டத்தின் முன் இந்த 'ஆட்சி உரிமை' விவகாரம் பலம் வாய்ந்தது, நவீன சட்ட அமைப்பின் பிரகாரம் இது இந்துக்களுக்குப் பாதகமான விடயமே.

எனவே இந்த விடயத்தில் வரலாற்று உண்மை, சம்பிரதாயம், சட்டம், நடைமுறை ஆகிய அனைத்துக்கும் இடையே இந்திய நீதித்துறை திணறப் போகின்ற விவகாரமாக இந்த விவகாரம் அமைந்துள்ளது. (முற்றும்)

### இராம ஜன்ம பூமி - பாபர் மசூதிப் பிரச்சினை :

# நீதிமன்றத் தீர்ப்புவரும்வரை மக்கள் அமைதியாக இருக்கவும்

- வி. பி. சிங்

(டில்லி)

இராம ஜன்ம பூமி, பாபர் மசூதி தொடர்பான பிரச்சினைக்கு அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளியாகும் வரை மக்கள் அமைதியுடன் காத்திருந்து அதனை மதித்து நடக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் வி பி சிங் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சமய சார்பின்மையை நிலைநாட்ட எதையும் செய்யத் தயாராக உள்ளதாகவும் எந்த ஆபத்தையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளதாகவும் பிரதமர்வி.பி.சிங்தெரிவித்துள்ளார்

இராம ஜன்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினைக்கு இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் தீர்வு ஒன்றினை காண்பதற்கு அனைத்துப் பிரிவினரும் அனைத்து அரசியல் கட்சிகளும் முழு அளவில் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதே வேளை இப்பிரச்சினை தொடர்பாக அனைத்துக் கட்சிக்கூட்டம் ஒன்றை இம்மாத முடிவில் நடத்தப் போவதாக இந்திய உள்துறை அமைச்சர் முக்தி மொகமது செய்யது அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் இராம ஜன்ம பூமி, பாபர் மசூதி நிர்வாகக் குழுவினரை தனித்தனியாக சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாபர் மசூதியை அப்படியே வைத்துக்கொண்டு இராமர் கோவிலைக் கட்டுவது சுமுகமான தீர்வாகும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

## 1994 இல் யப்பானில் ஆசிய விளையாட்டுப் போட்டி

(பீக்கிங்)

சீனாவின் தலைநகரான பீக்கிங் இல் நடைபெற்ற 11 வது ஆசிய விளையாட்டுப் போட்டி நேற்று முன் தினம் முடிவடைந்தது. அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டி 1994 இல் யப்பானிய நகரமான ஹிரோசிமாவில் நடைபெறவுள்ளது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹிரோசிமா அணுகுண்டு வீச்சுக்கு இலக்காகிய நகரம் என்பது குறிப்பிடத்தக்கது.

## குவைத்திலிருந்துயுத்தமின்றியே ஈராக் வெளியேறும்

### அமெரிக்கா, பிரிட்டன் நம்பிக்கை

(வாஷிங்டன்)

வளைகுடாவில் ஒரு யுத்தம் ஏற்படாதவாறு குவைத்தில் இருந்துஈராக் தனது இராணுவத்தினரை வாபஸ் செய்துவிடும் என்ற நம்பிக்கை தம்மிடம் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் பிரித்தானிய பிரதம மந்திரி மாக்கிரட் தட்சரும் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் ஈராக் முரண்டு பிடிக்குமேயானால் சர்வதேச பொருளாதாரத் தடையே குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறுவதற்கு போதுமான நடவடிக்கையாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## ஈராக்-ஈரான் இராஜீய உறவு ஏற்படுத்த இணக்கம்

(பாக்தாத்)

ஈராக்கும், ஈரானும் தத்தமது தலைநகரங்களில் தூதுவராலயங்களை அமைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளன.

இது தொடர்பாக இரு நாடுகளும் கடந்த சில வாரங்களாக ஈரானில் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளன.

இப்பேச்சு வார்த்தைகளின் பின்னர் இரு நாடுகளிலும் தூதுவராலயங்களைஅமைக்க இணக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒன்பது வருடங்களாக இருநாடுகளிலும், தூதுவராலயங்கள்இல்லாமைஇங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## நகருக்கு மின்சாரம் பல வாரங்களாகும்

யாழ். மாவட்டத்திற்கு மின்சாரம் கொண்டுவருவதற்கான துரித வேலைகள் தற்போது நடைபெற்றுவருவதாகவும், இருந்தும்யாழ் நகரப்பகுதிக்கு மின்சாரம் கிடைப்பதற்குப் பல வாரங்களாகலாம் எனவும் மின்சார சபை பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு எப்பொழுது மின்சாரம் வழங்கப்படும் எனக் கேட்டதற்கு மின்சாரம் வந்ததும்தான் அதனை தாம் மக்களுக்குத் தெரிவிக்கலாம் எனவும் அவர் கூறினார்.

### திராவிட முன்னேற்றக் கழகமே

# இலங்கையில் இன்று தமிழர் துன்பங்களுக்குக் காரணம்

(சென்னை)

இலங்கையில் இன்று தமிழர்கள் படும் துன்ப நிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகமே பொறுப்பேற்க வேண்டும் என இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி குற்றஞ் சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் மரீனாக் கடற்கரையில் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய ராஜீவ்காந்தி தேசிய முன்னணி அரசின் அசட்டையினாலேயே இலங்கையில் பிரச்சினை கூர்மையடைந்தது என்றும் பெருமளவிலான அகதிகள் தமிழ்நாட்டிற்குள் வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

### யாழ். கோட்டை வெற்றிக்கு

## காரணம் நானென்றால் சந்தோஷமாக ஏற்பேன்

- கருணாநிதி

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் யாழ்ப்பாணக் கோட்டை தற்போது புலிகள் வசமுள்ளது இந்த நிலைக்கு நான் தான் காரணமென எதிர்க்கட்சிகள் தெரிவித்தால் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வேன் என தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அப்பாவி மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதற்கும், அகதிகளாக தமிழகத்திற்குத் தப்பியோடி வருவதற்கும் திரு. கருணாநிதியின் ஆட்சிதான் காரணம் என்று நேற்று முன்தினம் மெரினா கடற்கரையில் இடம்பெற்ற பொதுக்கூட்டமொன்றில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்தார். அதனைச் சுட்டிக்காட்டி நிருபர்கள்கேட்டகேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு கருணாநிதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

## வடமராட்சி வியாபாரிகள் ஐவர் மட்டக்களப்பில் கொலை

(மாங்குளம்)

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் வடமராட்சியைச் சேர்ந்த ஐந்து வியாபாரிகள் இராணுவத்தாலும், ஊர்காவற்படையினராலும் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

புலோலி மேற்கைச் சேர்ந்த செல்வநாயகம் பாலசுப்பிரமணியம் (வயது 45) அவரது மாமன் வேலாயுதம் (வயது 60) மற்றும் அயலவர் செல்வராசா (வயது 45) காந்தியூரைச் சேர்ந்த உதயன் (வயது 30) சின்னவேலாயுதம் (வயது 50 ஆகியோர் மில் ஒன்றில் இருந்த வேளையில் புலிகளுடன மோதி பல இழப்புக்களுடன் திரும்பிய அரச படைகள் இவர்களை இழுத்து வீதியில் போட்டுத் துடிதுடிக்கச் சுட்டதாகவும், அவர்கள் ஸ்தலத்திலேயே இறந்ததாகவும் இராணுவததால் அட்பகுதிக் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் இவர்களுடன் இருந்து தெய்வாதீனமாக உயிர் தப்பிய சாவரயடியைச் சேர்ந்த மணியம் மேற்சண்ட தகவல்களை புரட்டாதி 12 ஆம் திகதியிடப்பட்ட கடித மூலம் மேற்படி குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தியதை யடுத்து சம்பந்தப்பட்ட வீடுகள் மரண ஓலமாக மாறியுள்ளன. (82)

## வங்கிகள் இயங்குகின்றன

பருத்தித்துறை இலங்கை வங்கியும், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியும் இயங்கத் தொடங்கியுள்ளன. பருத்தித்துறையில் மக்கள் வங்கியும் இயங்கவேண்டுமென வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை பருத்தித்துறையில் முன்னர் இடம்பெற்ற வன்செயல்களையடுத்து நெல்லியடி மக்கள் வங்கிக்கிளைக்கு மாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (25)

## நான்கு மாதம் சம்பளம் இல்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் கடந்த நான்கு மாதகாலமாக எவ்வித சம்பளக் கொடுப்பனவுகளும் தமக்கு வழங்கப்படவில்லை எனக் கவலை தெரிவித்துள்ளனர்.

இது விடயமாக கொழும்பில் இயங்கும் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யுமாறு மேற்படி ஊழியர்கள் தமது உயர் அதிகாரிகளை வேண்டுகிறார்கள். வடமாகாண அரச மரக் கூட்டுத்தாபனத்தில் அறுபத்தெட்டு ஊழியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

## வேலைக்குத் திரும்புக

வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பகுதி உத்தியோகத்தர்களை பொறியியலாளர் உடன் வேலைக்குத் திரும்புமாறு பணித்துள்ளார்.

வேலைப்பளு அதிகரித்து வருவதாலும் காலபோக வேளாண்மை ஆரம்பிப்பதாலும் சகல உத்தியோகத்தர்களையும், மேலும் தாமதிக்காமல் வேலைக்குத் திரும்புமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## மிதிவெடியில் இருவர் காலை இழந்தார்கள்

(மண்டைதீவு)

மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினர் வைத்துச் சென்ற மிதிவெடியில் சிக்கி ஒருவர் தனது காலில் ஒன்றை இழந்துள்ளார்.

நேற்று மண்டை தீவுக்குத் தமது வீட்டை பார்வையிடச் சென்ற இளங்கோ (வயது 15) என்பவரே காலை இழந்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் காக்கை தீவுப்பகுதியில் இருந்த மிதிவெடியில் சிக்கிய அனலைதீவைச் சேர்ந்த பரமலிங்கம் (வயது 47) என்பவரும் தமது காலில் ஒன்றை இழந்துள்ளார்.

இவர்கள் இருவரும் மானிப்பாயில் இயங்கும் போதனா மருத்துவ மனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (க)

## இலங்கை வங்கியில் உள்ளகவேலை ஆரம்பம்

([illegible])

யாழ். இலங்கை வங்கிகிளை தனது உள்ளக வேலைகளை நேற்று ஆரம்பித்திருந்தது. இருந்தும் வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கல் வாங்கல்கள் நேற்று ஆரம்பிக்கப்படவில்லை.

வாடிக்கையாளர்களுடனான எந்தவித கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் திகதி பற்றி பத்திரிகைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

## குவைத்தில் இருந்து இளைஞர் வெறும் கையுடன் திரும்பினர்

(வடமராட்சி)

குவைத்தில் பணிபுரிந்த வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர்கள் பலரும் வெறும்கையுடன் தமது இல்லங்களுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இவ்விளைஞர்களில் பலர் இந்திய இராணுவத்தினரினதும் துரோகக் கும்பல்களினதும் அடாவடித் தனத்திற்கு அஞ்சியே தாம் குவைத்திற்குச் சென்றதாகவும், அங்கு சென்று குறிப்பிட்ட சில மாதங்களில் பிரச்சினை தோற்றம் பெற்றதால் தொழிலுக்குக் கட்டிய பணத்தைக் கூட உழைக்க முடியவில்லையென வேதனையோடு கூறினார்கள்.

இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் ஆசைக்கு வாங்கி வந்த உடுப்புகள், கைக் கடிகாரங்கள், வீட்டு உபகரணங்கள் கூட சிங்கள இராணுவத்தினர் வவுனியாவிற்கு இப்பால் கொண்டுவர அனுமதிக்காததால் தாம் உடுத்த உடுப்புக்களுடனேயேஇங்கு வருகை தந்ததாகவும் அவ்விளைஞர்கள் மேலும் தெரிவித்தனர். (81)

## சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

கடமைக்குத் திரும்பாதுதற்போது யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வட பிராந்திய நெல் சந்தைப் படுத்தும் சபையைச் சார்ந்த சகல உத்தியோகத்தர்களையும் நாளை புதன்கிழமை நல்லூரில் அமைந்துள்ள நிர்வாகஉத்தியோகத்தர் காரியாலயத்தில் காலை 9.30 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு வடபிராந்திய முகாமையாளர் பொ. சிவபாலன் கேட்டுக் கொள்கின்றார்.

## சலுகைக் கட்டணத்தில் ஆசிரியர்களை அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு அப்பாலுள்ள மாகாணங்களில் இருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் சலுகைக்கட்டணத்துடன்மீண்டும் அவர்களுடைய வேலையிடங்களுக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, வட பிராந்திய மினிபஸ் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செய்துள்ளது எனவும், இவ்வாசிரியர்கள் அனைவரும் புதன்கிழமை மாலை 8பஸ்கள் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும் சங்கத்தின் பொதுச்செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

இச்சலுகைக்கட்டண அடிப்படையில்செல்வதற்காக விண்ணப்பித்த சகல ஆசிரியர்களையும், இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணிக்கு நல்லூர் ஸ்தான சி சி. தமிழ் வித்தியாலயத்தில் சங்க நிர்வாகிகளைச் சந்தித்து தமது பயணத்திற்கானசலுகைக் கட்டணத்தைச் செலுத்தி தமது போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் இடம்பெயர்ந்த ஆசிரியர்களிடம் கோரியுள்ளார்.

---

**15 நாட்களின்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டது.

சிங்களத்திலும் தமிழிலும் தம்மை சிலர் விசாரணைசெய்தனர் என்றும் விடுதலை செய்யப்படும் வரை தமது கண்கள் கட்டப்பட்டே இருந்தன என்றும் பறவைகளின சத்தத்தைக் கேட்டே பொழுதுகளைத் தாம் தீர்மானித்துக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர் என்று குற்றம் சாட்டப்பட்டு இறுதியில் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டதாகவும் தாம் அடைத்து வைக்கப்பட்டிருந்த பகுதிக்கு அண்மையில் அழுகுரல் கேட்டவண்ணம் இருந்ததாகவும் தெரிவித்தார்.

மடுகந்த என்ற சிங்களப் பகுதியில் வைத்து வானில் இறக்கிவிடப்பட்ட அவர் கடந்த ஐந்தாம் திகதி அதிகாலை வீடு வந்து சேர்ந்தார்.

இராணுவ உளவாளிகளே இவரைக் கடத்தினர் என்று கருதப்படுகிறது. (தி)

---

**கடலில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டி இழுத்துச் சென்றனர்.

ஒரு மாத காலமாகியும் இவர்களைப்பற்றிய எந்தவித தகவல்களும் தெரியாத நிலையில் இவர்களது உறவினர்கள் கவலையும், கண்ணீருமாகக் காணப்படுகின்றனர். (18)

---

**ஊழியர்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயத்தில் வைத்தியசாலை நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுத்து நோயாளர்களை இன்னல்களிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. வைத்தியசாலைக்கு வரும் சில மருந்துகளும் பொருட்களும் மாயமாகமறைந்துவிடும் சம்பவம் இவ்வைத்தியசாலையில் அடிக்கடி நிகழ்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (25)

---

**சரவணையில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலை நடாத்தின. இந்தத் தாக்குதலில் எஸ். கே. யோகநாதன், கே. விஸ்வலிங்கம் ஆகியோரது வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. அத்துடன் அயலில் உள்ள பல வீடுகளும் சேதமுற்றது. இத் தாக்குதலில் மூன்று பெண் பிள்ளைகள் காயத்திற்குள்ளானார்கள். (லோ)

---

**மாரடைப்பால்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் கிடந்த சடலத்தை கண்ட இளைஞர்கள் அதனை தெல்லிப்பழை அரசினர்மருத்துவ மனையில் ஒப்படைத்துள்ளனர். இவர் அச்சுவேலியைச் சேர்ந்தவர் என்றும் காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை ஊழியர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

---

**உடன் கடமைக்கு**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்த மூர்த்தி இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

வருங்கால இளம் சந்ததியினரின் கல்வி பாதிப்படைகின்றது. மருத்துவ வசதியின்றி அவலச்சாவுகள் இடம் பெறுகின்றனஉணவுஉற்பத்திஇல்லை பணத்தட்டுப்பாடென சகல வழிகளிலும் மக்கள்பாதிப்புறுகின்றனர். ஆகவே ஊழியர்கள் அனைவரும் கடமைக்குத் திரும்பிச் செல்லவேண்டும் எனக்கேட்டுக் கொண்டார்.

இக் கூட்டத்திற்கு வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சீலன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மனோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---

**அனுமதி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத்திற்கான பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு உணவு விநியோகமும் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள ஜே 62, ஜே 63 கிராமசேவையாளர் பிரிவுகளில் குறிப்பாக இந்தக் கொடுப்பனவுகள் கச்சிதமாக நடைபெற்று வருகின்றதுடன் மேலும் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் நடந்துவருவதாகவும் தெரிகிறது. இந்தக் கொடுப்பனவுகளுக்கு கிராம சேவையாளர்களின் தில்லுமுல்லுக்களேகாரணமாக உள்ளது எனவும் தெரியவருகிறது. (லோ)

---

**அரச ஊழியருக்கு**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. மீண்டும் நாளையில் இருந்து இவர்களுக்கான அனுமதி வழங்கப்படும் எனத் தெரிகின்றது.

---

**யாழ். மாநகரசபை**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்து விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த விடுதியில் மாநகரசபையின் அத்தியாவசிய அலுவல்களைக் கூட செய்வதற்கு இடப் பற்றாக்குறை நிலவுவதால் மீண்டும் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள பழைய மாநகரசபையில் வேலைகளை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (லோ)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.